DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.20/2020**

Deposition of Witness : PW-1(மனுதாரர்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்பிரமணி. | Father's Name | : | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 10.02.2026.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு Ms.S.Shanthi (Examiner) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை– தொடங்கப்பட்ட நேரம் : 11.27 மு.ப

நான் இம்மனுவின் மனுதாரரர். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைகள் தான், அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். நான் என் தரப்பில் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணங்கள் **ம.சா.ஆ–1** முதல் **ம.சா.ஆ–8** வரை குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி தீர்ப்பாகுமாறு பிரார்த்திக்கிறேன்.

(ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3, ம.சா.ஆ.5, ம.சா.ஆ.6 ஆவணங்கள் அசல் மனுவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள், ம.சா.ஆ.4, ம.சா.ஆ.7, ம.சா.ஆ8 ஆவணங்கள் உரிமையியல் நடைமுறைச்சட்ட கட்டளை 7 விதி 14(3)ன் படியாக மனுதாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. **ம.சா.ஆ.3** மருத்துவ பில்கள்களில் உள்ள விபரங்கள் நிபந்தனைக்கு உட்படுத்தப்பட்டு குறியீடு

செய்யப்படுகிறது. **ம.சா.ஆ.7** நுண்கதிர் படம் மனுதாரர் மூலமாக குறியீடு செய்ய முடியாது. சம்பந்தப்பட்ட மருத்துவர் மூலம்தான் குறியீடு செய்யப்பட வேண்டும் என் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. **ம.சா.ஆ.8** ஊனச் சான்றிதழ் தனியார் மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. முறையாக அரசு மருத்துவ வாரியத்திலிருந்து பெறப்படவில்லை. ஆகையால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

**1ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினர்**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் உண்மைதான். சம்பவத்தின்போது நான் திருமலாபுரத்திலிருந்து போடிக்கு செல்லும்போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் எனது ஊரிலிருந்து வந்து தேனி டூ போடி சாலையில் திரும்பும்பொழுது சாலையின் வலதுபக்கம் திரும்பினேன் என்றால் சரிதான். நான் விபத்தின்போது சாலையை கடக்க வேண்டும் என்றால் சாலையை கடந்து இடது பக்கமாக செல்ல வேண்டும் ஆனால், சாலையை கடந்து வலது பக்கம் சென்றுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது விபத்தை ஏற்படுத்திய பேருந்தானது போடியிலிருந்து மேற்கு திசையிலிருந்து கிழக்காக வந்தது. நான் எனது ஊரிலிருந்து வடக்கிலிருந்து தெற்கே சென்று மேற்கு போடி செல்ல வேண்டும் என்றால் சரிதான். விபத்தின்போது TN 59 T 6510 TVS Suzuki max 100 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை நான்தான் ஓட்டிச் சென்றேன். அதன் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது. நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இருந்ததா இல்லையா என்று எனக்கு ஞாபகமில்லை. விபத்தை ஏற்படுத்திய TN 60 D 4141 பேருந்திற்கு விபத்தின்போது பர்மீட்டும் தகுதி சான்றிதழும் இல்லாததால் 1ம் எதிர்மனுதாரர்தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் க.விலக்கு அரசு மருத்துவ குழுவிற்கு ஊனச்சான்று பெற செல்லவில்லை. விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் எனக்கு பூரணமாக குணமடைந்துவிட்டது என்றும் வழக்கிற்காக உண்மைக்கு மாறாக கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு நானும் ஒரு காரணம் என்பதால் நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை இவ்வழக்கில் சேர்க்காததால் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.


SARAVANAKUMAR.G.N
Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.02.10 19:25:23 +0530

பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 11.43 மு.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.02.10 19:25:28 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 10.02.2026